Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 04, 2024

திங்கட்கிழமை, 04 நவம்பர் 2024 | ஒளி: 10 கதிர்: 085 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ FREE



## மண்சரிவு எச்சரிக்கை

நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக நாட்டின் 8 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, களுத்துறை, கண்டி, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் மண்சரிவு தொடர்பான 2ஆம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பதுளை, காலி மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் முதலாம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், கேகாலை மாவட்டம் புளத்கொஹுபிட்டியலில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதைப் படத்தில் காணலாம்.

# “தோட்டத் தொழிலாளர்களின் சம்பள பிரச்சினையை தீர்ப்பேன்”

**மக்கள் எப்பொழுதும் அரசை நம்பி இருக்க வேண்டிய அவசியம் இல்லை, பொருளாதாரம் சீராகும் வரை மக்களைக் காப்போம்**

**நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னரும் ஜனாதிபதி செயலகத்திற்கு மரக்கறிகள் மற்றும் பல பொட்டலங்கள் வந்ததை அவதானித்தேன்**



*ரஞ்சித் ராஜபக்ஷ*

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னரான முதலாவது வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும். அத்துடன், தோட்டத் தொழிலாளர்களுக்கு நீதி கிடைக்குமென ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுத்தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் நுவரெலியா கிரேடகரி குளத்தின் கரையோரத்தில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றது. அதில், கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரச உத்தியோகத்தர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும் எனவும், அரச உத்தியோகத்தர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும், தங்களிடம் பணம் இருந்ததாகவும், எனவே, அதனை வழங்கியிருக்க வேண்டும் எனவும் முன்னாள் ஜனாதிபதித் தெரிவித்துள்ளார்.

சம்பள உயர்வுக்கு அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினர், அப்போது சத்தம் இல்லை, பல்கலைக்கழக ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். பல்கலைகழகங்கள் மூடப்பட்டன, அப்போது நஷ்டம் என்றனர். தொடர்ச்சி P2

## லொஹான் மாற்றப்பட்டார்



சட்டவிரோதமான முறையில் உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்ட சொகுசு காரை பயன்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். தொடர்ச்சி P2



## விசேட தினத்தில்

பொதுத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் விசேட தினமான, ஞாயிற்றுக்கிழமை (03) ஹட்டனில் சில பிரதேசங்களில் வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டன.

(படம்: ரஞ்சித் ராஜபக்ஷ)

## “முறைமை மாற்றம் நிகழவில்லை”



தற்போதைய ஜனாதிபதி, ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக மேடைக்கு மேடை நாட்டு மக்களுக்கு பெரும் நம்பிக்கையையும் எதிர்பார்ப்பையும் ஏற்படுத்தினார். முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்துவோம் என்று கூறினாலும், இதுவரை குறித்த முறைமை மாற்றம் நிகழவில்லை. அவரது கட்சி, சின்னம், அணி மற்றும் அவர்களது சமூக வலைத்தள குழுமங்களிலேயே மாற்றம் ஏற்பட்டுள்ளது. தொடர்ச்சி P2



## பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் முக்கிய பேச்சு

பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள யாழ். மாவட்ட இராணுவ தலைமையகத்தில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், யாழ். மாவட்ட இராணுவ கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க மற்றும் இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடல் சனிக்கிழமை (02) இடம்பெற்றது. தொடர்ச்சி P2

## பாசிக்குடாவில் பலத்த பாதுகாப்பு

*ரீ.எல்.ஜவ்பர்கான்*

அறுகம்பே சுற்றுலா தளத்திற்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலைத் தொடர்ந்து இலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலா தளங்களில் ஒன்றான பாசிக்குடா கடற்கரைக்குப் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தொடர்ச்சி P2



## பலாலி - அச்சுவேலி வீதியை திறக்க ஏற்பாடு



**எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக ஆலோசனை**

பலாலி - அச்சுவேலி பிரதான வீதி, மூன்று தசாப்தங்களின் பின்னர் வெள்ளிக்கிழமை (01) திறக்கப்பட்டது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் பணிப்புரையின் பிரகாரமே இந்த வீதி திறக்கப்பட்டது.

முப்பது வருடகால யுத்தம் காரணமாக இந்த பிரதான வீதி மூடப்பட்டதுடன், யுத்தம் நிறைவடைந்து 15 வருடங்களுக்கு மேலாகியும் இதுவரை இந்த வீதி பொது மக்களின் பாவனைக்காகத் திறக்கப்படவில்லை. தொடர்ச்சி P2


## “துன்ஹிந்த பஸ் போன்று நாடு விபத்துக்குள்ளாகும்”



அனுபவம் வாய்ந்தவர்களைப் பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யாவிடின் துன்ஹிந்த - பதுளை வீதியில் கவிழ்ந்த கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக பஸ் போன்று நாடு விபத்துக்குள்ளாகும் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆர்கேட் சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற மாநாட்டின் போது, கேட்கப்பட்ட கேள்விக்கு இலகுவான சிரையில் பதிலளித்த விக்ரமசிங்க, தொடர்ச்சி P2

## விலைகள் குறைந்தன



மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் லங்கா சதொச நிறுவனம் விற்பனை செய்யும் சில அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் தெரிவித்துள்ளது.

சதொசவின் பிரகாரம், பச்சைப்பயறு கிலோ கிராம் ஒன்றின் விலை 51 ரூபாவினால் 850 ரூபாவில் இருந்து 799 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் வெள்ளை கௌபி 20 ரூபாவினால் 900லிருந்து 880 ரூபாவாகவும், ஒரு கிலோ கிராம் வெள்ளை சீனியின் விலை 5 ரூபாவினால் 248 ரூபாவிலிருந்து 243 ரூபாவாக தொடர்ச்சி P2

## அறுகம்பே அச்சுறுத்தல்; அறுவர் கைது

**மாலைதீவு பிரஜை, இலங்கையர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன**

அறுகம்பேவில் சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுத்தியமை தொடர்பில் மாலைதீவு பிரஜை உட்பட ஆறு சந்தேகநபர்கள் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். அறுகம்பே பகுதியில் தாக்குதல்கள் நடத்தப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் மற்றும் கொழும்பில் உள்ள முக்கிய நிதித் தளங்களை தொடர்ச்சி P2

## துன்ஹிந்த விபத்து; மாணவன் மாயம்



பதுளை, துன்ஹிந்த, அபகஹஓயா 5ஆவது மைல்கல் பிரதேசத்தில் இடம்பெற்ற பஸ் விபத்தில் காயமடைந்து பதுளை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பல்கலைக்கழக மாணவர் ஒருவர் வார்டில் இருந்து சனிக்கிழமை (02) தப்பிச் சென்றுள்ளதாக தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# சம்பள பிரச்சினையை தீர்ப்பேன்”

தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்பட்டனர், மே 1ஆம் திகதியன்று கொட்டகலையில் வைத்து 1,750 வேதன உயர்வைத் தருவதாகச் சொன்னார்கள், ஆனால், எந்த தோட்டத் தொழிலாளியும் 1,750 ரூபாவை பெறவில்லை.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படும், தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளத்தை வழங்குவதற்காக நாம் செயற்பட்டு வருகின்றோம் என்றார்.

அத்துடன், மக்கள் எப்பொழுதும் அரசை நம்பி இருக்க வேண்டிய அவசியம் இல்லை, பொருளாதாரம் சீராகும் வரை மக்களைக் காப்போம், அதன் பிறகு மக்கள் செய்யும் வேலைகளில் நல்ல வருமானம் கிடைக்கும், மக்கள் நலமாக வாழலாம், ஒரு சமுதாயத்தை நிறுவுவதே தேசிய மக்கள் சக்தியின் கனவாக இருந்தது. இந்த கனவு எவ்வளவு காலமாக இருந்தது? மக்கள் எவ்வளவு கனவு கண்டார்கள்? இப்போது எங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைத்துள்ளது.

நாங்கள் பல தசாப்தங்களாக போராடினோம், ஆனால், நாட்டை கட்டியெழுப்ப எங்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை, புதிய வணிகர்களை உருவாக்குவதற்கான முன்னேற்றத் திட்டத்தை நாங்கள் உருவாக்குகிறோம்.

அரசியல்வாதிகளின் பிள்ளைகள், உறவினர்களே இதுவரை தூதரகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளனர், அவர்கள் அனைவரையும் திரும்ப அழைக்க முடிவு செய்துள்ளோம். தூதரகங்களில் பணிபுரியும் பெரும்பாலானவர்கள் அரசியல்வாதிகளின் பிள்ளைகள்.

நுவரெலியா ஜனாதிபதி மாளிகையைச் சுற்றிலும் பாரிய நிலப்பரப்பு உள்ளதுடன், அந்த நிலத்தில் கரிம உரங்களைப் பயன்படுத்தி வெற்றிகரமான மரக்கறிச் செய்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஜனாதிபதி செயலகத்திற்கு 60 கிலோ கிராம் மரக்கறிகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

அப்படித்தான் முந்தியவர்கள் வாழ்ந்திருக்கிறார்கள், ஆர்கானிக் காய்கறிகளைச் சாப்பிட்டு வாழ்கிறார்கள், நாட்டு மக்கள் ரசாயன உரமிட்ட காய்கறிகளைச் சாப்பிடுகிறார்கள். நான் ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னரும் ஜனாதிபதி செயலகத்திற்கு இவ்வாறான மரக்கறிகள் பல பொட்டலங்கள் வந்ததை அவதானித்தேன். எனினும், அதனை நான் நிராகரித்து விட்டேன் என்றார்.

# “முறைமை மாற்றம்...

இதுவரை இருந்து வந்த பழைய முறைமையே தற்போதும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

2024 பொதுத் தேர்தலை இலக்காக் கொண்டு மட்டக்குளி மக்களுடனான சந்திப்பொன்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் சி.வை.பீ.ராம் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பு மட்டக்குளியில், சனிக்கிழமை(02) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், ஆட்சிக்கு வந்ததும் மின்சாரக் கட்டணத்தைக் குறைப்போம், எரிபொருள் விலையைக் குறைப்போம், அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளைக் குறைப்போம், கடவுச்சீட்டு வரிசையை ஒழிப்போம், வரியைக் குறைப்போம் என்று சொன்னார்கள், இவை எதுவும் நடக்கவில்லை. பொருட்கள், அரிசி, தேங்காய் விலையை குறைக்க முடியாமல் தற்போது தேங்காய்க்கு வரிசைகள் கூட உருவாகியுள்ளது.

அன்று எரிபொருள் விலை சூத்திரத்தை விமர்சித்து விட்டு, இன்று அதே விலை சூத்திரத்தைப் பயன்படுத்தி, உயர் வர்க்கம் பயன்படுத்தும் சுப்பர் டீசலின் விலையை மட்டும் குறைத்துள்ளனர். சாதாரண மக்கள் பயன்படுத்தும் எரிபொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை.

இதெல்லாம் மக்களை ஏமாற்றும் கதைகள். ஆட்சிக்கு வந்த பிறகு வரியைக் குறைப்பதாகச் சொல்கிறார்களே தவிரக் குறைத்த பாடில்லை. சர்வதேச நாணய நிதியத்துடன் இரண்டு சுற்றுப் பேச்சுக்கள் இடம்பெற்ற போதிலும், அந்தப் பேச்சுக்களின் பின்னர், உழைக்கும் வர்க்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் முன் மண்டியிட்டுள்ளார்.

அவரும் சர்வதேச நாணய நிதியத்தின் தாளத்திற்கு ஆட தொடங்கியுள்ளார். தற்போதைய ஜனாதிபதி ஊடகங்களும் அழுத்தங்களைப் பிரயோகிக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றார் என அவர் மேலும் தெரிவித்தார்.

# துன்ஹிந்த விபத்து; மாணவன் மாயம்

பதுளை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜாஎல அலெக்சாண்டர் மாவத்தையில் வசிக்கும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் 24 வயதுடைய பல்கலைக்கழக மாணவர் ஒருவரே வைத்தியசாலை வார்டில் இருந்து இரகசியமாக தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளிக்கிழமை (01) இடம்பெற்ற விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். 35 பேர் வரை காயமடைந்தனர். உயிரிழந்தவர்களில் இருவர் பல்கலைக்கழக மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாசிக்குடாவில் பலத்த பாதுகாப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தின் கல்குடா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பாசிக்குடா கடற்கரை இலங்கையின் புகழ்பெற்றதும் உலகின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலங்களின் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

குறித்த பாசக்குடா கடற்கரையில் தினமும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வருகை தருகின்றனர்

விடுமுறை தினங்கள் மற்றும் முழுமதி போயாதினங்கள் உட்பட பல்வேறு பண்டிகை காலங்களிலும் வெளிநாட்டு உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளால் பாசிக்குடா கடற்கரை நிறைந்து காணப்படும்.

குறித்த கடலில் மகிழ்ச்சியான முறையில் நீராடி மகிழ்வதற்கும் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்து ஓய்வு நேரத்தை கழிப்பதற்குத்தாக பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

பாசிக்குடா கடற்கரை திடலில் பொலிஸார் மற்றும் கடற்படையினர் சுற்றுலா பொலிஸார் உட்பட பல்வேறு வகையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

24 மணித்தியாலமும் குறித்த பாதுகாப்பு நடவடிக்கைகள் இடம் பெறுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# விலைகள் குறைந்தன

குறைக்கப்பட்டுள்ளதாக நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் சமன் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அனைத்து சதொச கடைகளிலும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தை தலா 300 ரூபாவிற்கு கொள்வனவு செய்ய முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# “துன்ஹிந்த பஸ் போன்று நாடு விபத்துக்குள்ளாகும்”

அனுபவம் வாய்ந்தவர்களைப் பாராளுமன்றத்திற்கு மக்கள் தெரிவு செய்யத் தவறினால் துன்ஹிந்த - பதுளை வீதியில் கவிழ்ந்த பேருந்தைப் போன்று நாடு விபத்துக்குள்ளாகும் என்றார்.

# பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் முக்கிய பேச்சு

இக் கலந்துரையாடலில் பலாலி உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாகவும், உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து விடுவிக்கப்படுகின்ற வீதி, காணிகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் பல்வேறுபட்ட விடயங்கள் கலந்து ஆலோசிக்கப்பட்டது.

அத்துடன், பொதுமக்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் உதவிகள் மற்றும் சேவைகள் தொடர்பான விடைகள் விரிவாக இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்தனர். பலாலி உயர் பாதுகாப்பு வலயத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் இறுதியில் ஆளுநர், மரக்கன்று நடுகை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் விடுவிக்கப்பட்ட பலாலி - அச்சுவேலி பிரதான வீதியை வடமாகாண ஆளுநர் நேரில் சென்று பார்வையிட்டார்.

# லொஹான் மாற்றப்பட்டார்

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கண்டி, கட்டுகஸ்தோட்டை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்துக் கடந்த 31 ஆம் திகதி கைது செய்யப்பட்ட அவர், அன்றிரவு நுகேகொட மேலதிக நீதவான் முன்னிலையில் முன்னிறுத்திய பின்னர், எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சிறையில் இருந்தபோது ஏற்பட்ட திடீர் சுகவீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

# அறுகம்பே அச்சுறுத்தல்; அறுவர் கைது

புகைப்படம் எடுத்த சம்பவங்கள் தொடர்பில் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக அமைச்சர் கூறினார்.

“இதுவரை, நாங்கள் ஆறு நபர்களைக் கைது செய்துள்ளோம். மாலைதீவு பிரஜை மற்றும் ஐந்து இலங்கையர்களும் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், இது என்ன வகையான திட்டம் அல்லது முயற்சி என்று எங்களால் இன்னும் சொல்ல முடியாது. ஏனெனில் கைது செய்யப்பட்ட 6 பேரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களில் இருந்து அப்படி ஒரு முடிவுக்கு வர முடியாது. எனவே, தேவையற்ற தவறான விளக்கங்கள் தவிர்க்கப்பட வேண்டும்” என அமைச்சர் ஹேரத் தெரிவித்துள்ளார்.

# எனக்கு பிரதியீடாக பாரத் வர வேண்டும்

எஸ்.கணேசன்



பாரத் அருள்சாமியிடம் சிறந்த ஆளுமைக்குரிய ஆற்றல் உள்ளது. அவர்போன்ற இளைஞர்கள் நிச்சயம் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

வேட்பாளர் பாரத் அருள்சாமியை ஆதரித்து கண்டி மஹியாவ மற்றும் குயின்ஸ் விருந்தகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

“தனது தந்தையின் பெயரைப் பயன்படுத்தி அரசியல் செய்வதைவிட பாரத் அருள்சாமியிடம் சிறந்த ஆளுமை இருப்பதை நான் கூர்மையாக அவதானித்துவருகின்றேன்.

நல்ல திறமையான புதிய ஆளுமையை மனோ கணேசன் கண்டி மாவட்ட வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. அவருக்கு 34 வயதுதான் ஆகின்றது. நான் முதன்முதலில் பாராளுமன்றம் சென்றபோது எனது வயதும் 34 தான். தற்போது நான் ஓய்வுபெறும் காலம் நெருங்கிக்கொண்டு வருகின்றது. பாரத் போன்ற ஒருவர் இம்மாவட்டத்தில் எனக்கு பிரதியீடாக வரவேண்டும் என எதிர்பார்க்கின்றேன். ஏனெனில் அவரிடம் ஆளுமைக்குரிய அம்சங்கள் உள்ளன.

என்னைப் போன்ற அரசியலுக்கு பரீட்சயமானவர்போலவே பாரத் செயற்பட்டுவருகின்றார். கண்டி மாவட்டத்துக்குச் சிறந்த பொக்கிஷம் கிடைத்துள்ளது. முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளையும் அவர் அரவணைத்துச் செல்லக்கூடியவர். எனவே, அவரின் வெற்றிக்கு முஸ்லிம் மக்களும் கூடுதல் பங்களிப்பைச் செய்ய வேண்டும்” என்றார்.



# பல்கலைக்கழக நூலகத்தை பார்வையிட்ட மாணவிகள்

எம்.எப்.றிபாஸ்.

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகத்திற்கு அட்டாளைச்சேனை அல் -முனீறா பெண்கள் உயர் பாடசாலையின் உயர்தர மாணவிகள் விஜயமொன்றைப் புதன்கிழமை (30) மேற்கொண்டிருந்தனர்.

பாடசாலையின் அதிபர் ஏ.சீ.நியாஸின் வழிகாட்டலின் கீழ் பிரதி அதிபர் எம்.ரீ.எம்.சியாத், தலைமையில் பிரதியதிபர் ஏ.ஜே.எம். ரினீஸ், நூலக கற்றல் வள நிலையப் பொறுப்பாசிரியர் கே.எல்.எப்.நப்லா மற்றும் ஆசிரியர்களான எம்.எச்.எம்.ஜிப்ரியா, கே.ஜெனீசியா, எம்.எஸ்.எம்.பஸீல், எம்.ஐ.நஜீம் ஆகியோருடன் குறித்த மாணவிகள் சென்று நூலகத்தைப் பார்வையிட்டனர்

மாணவர்களின் கற்றல் நடவடிக்கைகள் சம்பந்தமான பல்கலைக்கழக நூலகர் எம்.எம்.றிபாயுடீன், “நூலகத்தின் செயல்திறன், ஆராய்ச்சி நுட்பங்கள்” எனும் தலைப்பில் உரை ஒன்றை நிகழ்த்தினார். பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பார்வையிட்ட மாணவர்கள் பேராசிரியர்களான எம்.எம்.பாஸில், எஸ்.எம்.அய்யூப் ஆகியோருடனும் கல்வியோடு தொடர்பான பல்வேறுபட்ட விடயங்களைக் கேட்டறிந்தனர்.



# பலாலி – அச்சுவேலி வீதியை திறக்க ஏற்பாடு

இந்த வீதியைத் திறப்பது தொடர்பில் வடமாகாண மக்கள் தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வந்த நிலையில் கடந்த ஒக்டோபர் 22 ஆம் திகதி ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவிற்கும் ஆளுநர்களுக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகமும் இது தொடர்பில் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதன்படி, இந்த வீதியைத் திறப்பது தொடர்பிலுள்ள பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு தரப்பினருக்கு ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க அறிவித்திருந்தோடு, பாதுகாப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் தலையீட்டின் பேரில் இந்த வீதியைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# “கல்முனைக்கு துரோகம்”

நூருல் ஹுதா உமர்

காலம் காலமாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தன்னகத்தே வைத்திருந்த கல்முனை, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சகோதரர் எச்.எம்.எம்.ஹரீஸ் தேர்தலில் போட்டியிட அனுமதி மறுக்கப்பட்டதன் ஊடாக தனக்கான பிரதிநிதித்துவத்தை இல்லாமலாக்க பாரிய சதி ஒன்றை அரங்கேற்றியுள்ளனர் என புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிடும் கலாநிதி ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

சாய்ந்தமருது- பொலிவேரியன் கிராமத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஷுக்கு துரோகம் இழைக்கப்பட்டு உள்ளதை அறிந்து,



கல்முனைக்கான பிரதிநிதித்துவத்தின் அவசியத்தை உணர்ந்த நான், புதிய ஜனநாயக முன்னணியின் ஊடாக எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை சகோதரர் ஹரீஷுக்கு வழங்கி கல்முனையை அழகு பார்க்க விரும்பினேன்.

என்றாலும் அவர், மனதளவில் உடைந்திருந்ததால் என்னைக் களத்தில் இறங்குமாறும் எனக்கு உதவுவதாகவும் கூறினார். அதன் பின்னரே இறுதி நேரத்தில் கையொப்பமிட்டுத் தேர்தலில் குதித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மது பிராந்தியம் பல்வேறு தேவைகளை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிறது.

மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவது என்றால் மக்களின் சார்பில் சிறந்த பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்குச் செல்ல வேண்டும். தற்போது களத்தில் இறங்கியுள்ளவர்களுடன் என்னையும் ஒப்பிட்டு நான் சிறந்தவன் என்றால் எனக்கு வாக்களியுங்கள். கடந்த காலங்களில் எனக்குக் கிடைத்த அதிகாரங்களை வைத்து இந்த பிராந்தியத்துக்கு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்களைச் செய்துள்ளேன். அத்துடன், நமது பிராந்தியத்தில் பாரிய பல்கலைக்கழகம் ஒன்று உருவாக மறைந்த தலைவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன் என்றும் கூறினார்.

## “வழி காட்டும் தாரகைகளாம் நூல்கள் வாசிப்பால் வென்றிடுவோம் நாங்கள்”

நூருல் ஹுதா உமர்

அரச சுற்று நிருபத்திற்கு அமைய நூலக வாரத்தினை முன்னிட்டு தேசிய வாசிப்பு மாதம் அக்டோபர் 2024 “வழி காட்டும் தாரகைகளாம் நூல்கள் வாசிப்பால் வென்றிடுவோம் நாங்கள்” எனும் தொனிப்பொருளில் நடமாடும் நூலகம் திறந்து வைக்கும் நிகழ்வு கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) யின் நூலக பொறுப்பாளர் ஏ.எல்.நளீம் தலைமையில் பச்சை வீடு கூடத்தில் இடம்பெற்றது.

மிகச் சிறப்பான நெறிப்படுத்தலில் இடம்பெற்ற நடமாடும் நூலகத் திறப்பு நிகழ்வில், கல்லூரியின் அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு சிறப்பித்தார். நடமாடும் நூலகத்தில் சமயம், அகராதிகள், நாவல், கல்வி, அறிஞர்கள், பாடப்புத்தகத்துடன் தொடர்பான நூல்கள், செய்தி பத்திரிகைகள்,





கவிதைகள், சஞ்சிகைகள் என பல்துறை சார்ந்த நூல்கள் காட்சிப்படுத்தப்பட்டு இருந்தது குறிப்பிடத்தக்கது.

இடைவேளை நேரத்தில், கல்லூரி சமூகத்தினர் பயன்பெறும் வகையிலும் வாசிப்பினை மாணவி மத்தியில் சமூக மயப்படுத்துவற்கான ஏற்பாடுகள், ஆலோசனைகள், வழிகாட்டல்களினை கல்லூரியின் நூலக பொறுப்பாளர் ஏ.எல்.நளீமால் வழங்கப்பட்டன.

மேலும், இந்நிகழ்வில் , பிரதி அதிபர்களான ஹாஜியானி எஸ்.எஸ்.எம்.சமதா மசூது லெவ்வை, ஏ.எச்.நதிரா, உதவி அதிபர் எம்.எஸ்.மனூனா, ஆசிரியர்கள், நூலக உத்தியோகத்தர்கள், நூலக சங்கத்தின் மாணவிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## முல்லைத்தீவில் நடமாடும் சேவை

வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (08 ) மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 4.00 வரை பொது மக்களை சந்திக்கவுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களின் நலன் கருதி அவர்களின் குறைகளைக் கேட்டறிந்து, உரியத் தீர்வுகளை விரைவாக வழங்கும் நோக்கத்தில் நடமாடும் சேவையினை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட



செயலகத்தில் இடம்பெற்ற நடமாடும் சேவையில் அதிகளவான பொதுமக்கள் பங்குபற்றிப் பயன்பெற்றனர்.

இதேபோல் மன்னார், வவுனியா,யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடமாடும் சேவை இடம்பெற உள்ள திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

## “புதுபுது சின்னங்களில் வருவோரை நிராகரிக்கவும்”

கனகராசா சரவணன்

கிழக்கு மீட்புக்கென வந்தவர்கள், தமிழர்களின் சொத்துகள், வளங்கள் பறிபோகும் போது அதனை கைக்கட்டி, வாய் பொத்திய மௌனிகளாகப் பார்த்துக் கொண்டு நின்றவர்கள் ஆவர். இவ்வாறான நிலையில், புதுப்புது சின்னங்களில் வருபவர்களைத் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும் என மட்டக்களப்பு மாநகரசபை முன்னாள் மேஜரும் வேட்பாளருமான தியாகராசா சரவணபவன் தெரிவித்தார்.

கல்லடியிலுள்ள காரியாலயத்தில் சனிக்கிழமை(02) இரவு இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், “இந்த முறை பொதுமக்கள் மத்தியில் ஒரு எழுச்சி ஏற்பட்டுள்ளதை



அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அனைவரும் தமிழரசு கட்சிக்கு வாக்களித்துச் சிறந்த வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்காக முன்வந்துள்ளமை மகிழ்ச்சியான விடயமாகும்.

தேசிய கட்சிகள், தமிழர்களின் பாராளுமன்ற பிரதிநிதிகளைக் குறைப்பதற்கான திட்டமே வடக்கு கிழக்கில் அதிகமாகக் களமிறக்கப்பட்டுள்ளனர். எனவே, இத்திட்டத்தை முறியடிக்கத் தமிழ் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு தேர்தலில் வாக்குகளைப் பிரிக்காமல் சிதறவிடாமல் தமிழரசு கட்சிக்குப் பலமான ஆதரவளித்து வாக்களித்து அவர்களுக்குப் பாடம் புகட்டவேண்டும் என்றார்.

## “எம்மை அனுப்புங்கள்”

க.அகரன்

சிங்கள-பௌத்த பேரினவாதத்திற்கு எதிரான மக்கள் போராட்டங்களில் தொடர்ச்சியாக இருந்திருக்கிறோம். ஒடுக்கப்பட்ட மக்களுக்காக வீதிகளில் இருந்த எங்களை எதிர்க்கட்சியாக பாராளுமன்றில் அமர்த்துமாறு மக்கள் போராட்ட முன்னணியின் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளர் நி.பிரதீபன் தெரிவித்தார்.

மக்கள் போராட்ட முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பு வவுனியா பூந்தோட்டத்தில் அமைந்துள்ள அலுவலகத்தில், ஞாயிற்றுக்கிழமை (03) நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், நாட்டின் இறைமை மற்றும் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, மதச்சார்பற்ற நாடு, தேசிய உற்பத்தி இவற்றினை மையமாக வைத்து மக்கள் போராட்ட முன்னணியாக இந்தத்தேர்தலில் நிற்கிறோம்.

நாங்கள் ஒடுக்கப்பட்ட தமிழ்த்தேசிய இனத்தின் பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுத்தவர்கள். தமிழ்த் தேசிய அரசியலில் இருப்பவர்கள் தேர்தல் காலத்தில் மாத்திரம் மக்களிடம் வருபவர்களாக இருக்கிறார்கள். ஆனால், மக்கள் சார்பான பிரச்சனையில் உரிய எதிர்த்தரப்பாக இருந்து குரல் கொடுக்கவில்லை என்பதை இங்குக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இன்று தமிழ்ச் சமூகம் எதிர்நோக்கக் கூடிய நெருக்கடிகள் பல இருக்கின்றன. இந்திய றோலர் படகுகளின் அத்துமீறல் பாரிய பிரச்சினையாக இருக்கிறது. இரு நாட்டு மீனவர்களுக்கும் எமக்கும் எந்த பிரச்சினையும் இல்லை அதனைத் தொப்புள்கொடி உறவாகவே நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

ஆனால், றோலர் படகுகளின் அத்துமீறலானது எதிர்காலத்தில் வடபுலத்தில் இருக்கக் கூடிய மீன் வளத்தை அழிக்கும் நிலைமைக்கே வித்திடும். இந்தவிடயம் தொடர்பாக அரசாங்கம் மற்றும் இந்தியத்தரப்புகள் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்திவருகிறது. அந்த ஒப்பந்தம் அமுல் படுத்தப்பட்டால் எமது 2 இலட்சம் மீனவர்கள் வீதிக்கு வரும் நிலையே ஏற்படும்.

இதுவரையான காலப்பகுதி வரை சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு நாம் தொடர்ச்சியாகச் சிம்மசொப்பனமான முறையில் மக்கள் போராட்டங்களில் இருந்திருக்கிறோம். வளங்களை அந்நிய சக்திகளுக்கு விற்க முற்படும் போது அதனைக் கடுமையாக எதிர்த்திருக்கின்றோம் என்றார்.




## திருக்கோவிலில் கந்தசஷ்டி விரதம்

வி.ரி. சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் கந்த சஷ்டி விரதம் கந்தபுராணம் பாடலுடன் சனிக்கிழமை (02) ஆரம்பித்தது.

நூற்றுக்கணக்கான விரதாதிகள் முதல் நாளிலேயே ஆலயத்திற்கு வருகைதந்து தர்ப்பை அணிந்து முறைப்படி விரதத்தை ஆரம்பித்தனர். ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் மற்றும் ஆலயகுரு சிவசிறி அங்குசநாதக்குருக்கள் முன்னிலையில் விரதம் அனுஷ்டிக்கப்படுகிறது.

கலாபூஷணம் த.மகேந்திரா தலைமையிலான புராணம் பாடுவோர் கந்தபுராணம் பாடப் பிரபல புராணபயனிகர் கலாபூஷணம் தம்பிமுத்து மகேந்திரா பொழிப்புரை வழங்கினார்.

ஆலயத்தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் நடைபெற்ற முதல் நாள் பூஜையில், ஆலய வண்ணக்கர் வ.ஜயந்தன் கணக்குப் பிள்ளை இ.லோகிதராஜா பொருளாளர் கோ.கிருஸ்ணமூர்த்தி சமய ஆர்வலர்களான க.பார்த்தீபன் (பிரான்ஸ்) மற்றும் வி.ரி.சகாதேவராஜா ஆகியோரும் சமூகமளித்திருந்தனர்.

இந்த கந்தசஷ்டி விரதம் 6ஆம் நாளாகிய 07ஆம் திகதி சூர சம்ஹாரத்துடன் நிறைவு பெறுகின்றது.

இம்முறை வழமைக்கு மாறாக ஏராளமான பக்தர்கள் விரதத்தினை அனுஷ்டிக்க வந்திருந்தனர்.


இவ்வருடம் கந்தசஷ்டி விரதத்திற்கான சஷ்டித்திதி 6ஆம் திகதி புதன்கிழமை முன்னிரவு 10.18க்கு கூடி, மறுநாள் 07ஆம் திகதி வியாழக்கிழமை முன்னிரவு 9.35 மணிக்கு கலைகிறது என்று பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தெரிவித்தார். ஆகவே, விரதாதிகள் அதற்கேற்ப நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். எதிர்வரும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை திருக்கல்யாணம் நிகழ்வுடன் விரத உற்சவம் நிறைவுபெறும் என்று ஆலய பரிபாலன சபையின் செயலாளர் அ.செல்வராஜா தெரிவித்தார்.



















# ஜனாதிபதி தேர்தல் வாக்குறுதிகள் காற்றில் கரைகின்றனவா?

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது, "தாம் ஆட்சிக்கு வந்தால் மேற்கொள்வோம்" என தற்போதைய ஜனாதிபதி அடங்கலாக அவர்களின் கட்சியைச் சேர்ந்தவர்கள் மக்களுக்கு வழமை போல வாக்குறுதிகளை வழங்கியிருந்தனர். அதில் ஒன்று எரிபொருள் விலைகளைப் பெருமளவில் குறைப்பது என்பதும் அடங்கியிருந்தது.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்று, ஒரு மாத காலத்துக்கும் அதிக காலம் கடந்துவிட்ட நிலையில், அவரின் பொறுப்பில் இரண்டாவது தடவையாக நவம்பர் மாதத்துக்கான எரிபொருள் விலைச் சீராக்கம் தொடர்பில் தீபாவளி தினத்தன்று அறிவிக்கப்பட்டது.

நாட்டின் அன்றாட தொழில் புரிவோர் முதல், பெரும்பாலானோர் பயன்படுத்தும் எரிபொருள் வகையான 92 ஒக்டேன் பெற்றோல் மற்றும் ஒடோ டீசல் ஆகியவற்றின் விலைகளில் குறைப்பு ஏற்படுத்தப்படும் என சாதாரண மக்கள் பெரிதும் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், விலைக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டது என்னவோ, சொகுசு வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் உயர் ரக எரிபொருட்களுக்கு மட்டுமே.

ஒக்டோபர் மாதம் முழுவதும் அமெரிக்க டொலரின் விலை சராசரியாக 300 ரூபாய் என்பதை விடக் குறைந்த மட்டத்திலேயே நிலவியிருந்தது. இந்நிலையில், ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முன்னர் சுமார் 150 ரூபாய்க்கு பெற்றோல் வழங்க முடியும் என மேடைகளில் பேசியிருந்த தற்போதைய ஜனாதிபதி, விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், தாம் முன்னர் வழங்கிய உறுதி மொழிகளை மறந்து விட்டார் போலும். அல்லது, அவர் முன்னர் கூறியது வழமையாக, தேர்தல் காலங்களில் வேட்பாளர்கள் அனைவரும் தெரிவிப்பதைப் போன்ற பொய் வாக்குறுதிகள் தானா?

ஆட்சிப் பொறுப்பேற்று ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையில், இந்த அரசினால் பொது மக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்களவு மாற்றம் எதுவும் ஏற்பட்டதாகக் குறிப்பிட முடியாது. கடவுச்சீட்டுக்குத் தீர்வு கண்டு விட்டோம் என்று அரசாங்கம் கூறினாலும், இன்னமும் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருந்து அவலப்படும் நிலைதான். அவசர அத்தியாவசியத் தேவைகளுக்கு மாத்திரம் கடவுச்சீட்டைப் பெறுமாறு விடயத்துக்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். இதுவும் கடந்த காலத்தில் ஆட்சியிலிருந்தவர்கள் அத்தியாவசிய தேவை இருந்தால் வைத்தியசாலைக்கு வரவும், அத்தியாவசிய தேவை இருந்தால் மாத்திரம் பயணங்களை மேற்கொள்ளவும் என கூறியதற்கு ஒப்பானதாகவே அமைந்துள்ளது.

"மக்கள் கௌரவமாக, சந்தோஷமாக வாழக் கூடிய நாட்டை ஏற்படுத்துவோம்" என மேடைகளில் தெரிவித்த கருத்துகள், உண்மையில் அவ்வாறான நாட்டை ஏற்படுத்தும் வகையில் நடவடிக்கைகள் எதுவும் இந்த அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டதாக இந்த ஒரு மாதத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தென்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் மீளாய்வும் பிற்போடப்பட்டுள்ளது. அமெரிக்காவில் நிதியத்துடன் அரசாங்கம் மேற்கொண்ட இரு சுற்றுப் பேச்சுகளிலும் முன்னேற்றங்கள் பதிவாகியிருக்கவில்லை. அத்தியாவசிய பொருட்கள் சிலவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன. நாட்டு அரிசி தட்டுப்பாடு ஆட்டிப்படைக்கின்றது. முட்டை விலை கண்டபடி கூடிக்குறைகின்றது. இவைதான் அரசாங்கத்தின் சுபீட்சமான நாட்டை ஏற்படுத்தும் நடவடிக்கைகளா? மற்றுமொரு தேர்தல் நெருங்கி வரும் நிலையில், அரசின் வாக்குறுதிகள் காற்றில் கரைவதை அவதானிக்க முடிகின்றது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மக்கள் நடத்தும் அரசியல்

**லக்ஸ்மன்**

இந்த ஆண்டு (2024) ஜனாதிபதித் தேர்தலில் பிரதான வேட்பாளர்களாகப் போட்டியிட்ட அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) யின் தலைவருமான அனுரகுமார திசாநாயக்க ஆகிய மூவரில் யாருக்கும் 50 சதவீத பெரும்பான்மை கிடைக்காது என்ற பலரது ஊகம் சரியாகவே அமைந்திருந்தது. இருந்தாலும், 42சதவீத வாக்குகளைப் பெற்று பெரும்பான்மை குறைந்த ஜனாதிபதியாக அனுரகுமார திசாநாயக்க தெரிவானார். இதுவும் ஒரு வரலாறே. இலங்கையின் வரலாற்றில் இவ்வாறான தெரிவு இதுவே முதல் தடவை என்பதும் இந்த இடத்தில் குறிப்பிடப்படவேண்டும்.

ஆனால் தேசிய மக்கள் சக்திக்கு 3 சதவீதத்தில் இருந்த வாக்கு சதவீதம் 42 சதவீதமாக சடுதியாக உயர்ந்திருக்கிறது. அது போலவே நடைபெறவிருக்கின்ற பாராளுமன்றத் தேர்தலிலும் இவ்வாக்கு சதவீதம் மேலும் அதிகரிக்கும் அறுதிப் பெரும்பான்மையுடன் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைக்கும் என்று அக்கட்சி திடமாக நம்பிக்கை கொண்டிருக்கிறது. இந்த நம்பிக்கை மக்களின் கைகளாலேயே நிரூபணமாகவேண்டும். மாற்றம் என்ற அலையின் பயனாக ஏற்பட்டிருக்கும் இந்த நம்பிக்கை ஒன்றும் பிரச்சனைக்குரியதல்லவே.

மாற்றம் என்கிற அலை தென்பகுதி உள்ளிட்ட சிங்களப் பிரதேசங்களில் மாத்திரமல்ல வடக்குக் கிழக்கிலும் அடித்துக் கொண்டிருக்கிறது. இந்த அலை தமிழர்களுக்கான தமிழ்த் தேசிய அரசியலைச் செய்துவருகின்ற அரசியல்வாதிகளையும் விட்டுவைக்கவில்லை. அது தமிழ் மக்களது எதிர்பார்ப்பு, விருப்பங்களின் அடிப்படையிலேயே ஏற்பட்டு வருகிறது. இதனை கடந்த தேர்தல்களின் போது தமிழ் மக்களுக்கான உரிமை அரசியல் பேசியவர்கள் வெளியிடுகின்ற உரிமையுடன் கூடிய அபிவிருத்தி எனும் கோசம் புலப்படுத்துகின்றதாகவே கொள்ளமுடியும்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் தற்போது அரசுடன் இணைந்து செயற்படுவதற்கான முஸ்தீபுடனான கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன. உதய கம்மன்பில போன்ற தென்பகுதி அரசியல்வாதிகள் அதற்கு எதிர்ப்புகளையும் வெளியிட்டு வருகின்றனர். இவ்வாறான கருத்துக்கள் தமிழ் மக்களிடம் உருவாகியிருக்கின்ற அரச ஆதரவு எண்ணப்பாட்டினை மழுங்கடிக்கச் செய்வதையும், அதே நேரத்தில், சிங்களத் தலைவர்களுடைய தமிழ் மக்களுக்கெதிரான நிலைப்பாட்டினையும் தெளிவுபடுத்துகின்றது எனலாம். தொடர்ந்தும் தெற்கில் இருந்து வருகின்ற இந்த நிலைப்பாடானது. கடந்த காலங்களில் கிழித்தெறியப்பட்ட டட்லி- செல்வா ஒப்பந்தம், பண்டா - செல்வா ஒப்பந்தம், சந்திரிகா அம்மையாரின் தீர்வுப் பொதி கிழிப்பு, நல்லாட்சி அரசாங்க மைத்திரி கால அரசியலமைப்புத் திருத்தம் கிடப்பில் போடப்பட்டுக் கைவிடப்பட்டமை போன்றவற்றுடன் நினைவுபடுத்திக் கொள்வதே சிறந்தது.

அரசாங்கங்கள் தமிழ் மக்களை ஏமாற்றும் தந்திரோபாயத்தினை மிகக் கவனமாகவும் கனகச்சிதமாகவும் பெருந்தேசியவாதமாக முன்னெடுத்து வந்திருக்கின்ற நிலையில், தாம் அரசுடன் இணைந்து செயற்படுதல் என்ற கருத்தானது தமிழ்த் தேசிய உரிமை ஒன்றே நோக்கம் என்றிருந்த தமிழ் மக்களுடைய அரசியல் நிலைப்பாட்டுக்கு விரோதமானது என்பது நிச்சயமானது. இந்த நிச்சயத்துக்குள் இருந்து கொண்டே இலங்கை சுதந்திரமடைந்தது முதலே தங்களுடைய உரிமைகளைப் பெற்றெடுப்பதற்காக இயங்கி வந்த தமிழ் மக்கள், தமிழ் மக்களுக்காக இயங்கிய தமிழ் அரசியல் கட்சிகள், தமிழ் அரசியல்வாதிகள் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் ஏற்பட்ட சூழலால் மக்களைப் பொருளாதார மேம்பாடு, தங்களுடைய வசதி மேம்பாடுகளை நோக்கிச் சிந்திக்க வைத்திருக்கின்றமை ஒரு மாற்று அரசியலல்ல. இந்த நிலைப்பாடு தோன்றத் தொடங்கியிருக்கின்றமை நல்லதாக இருந்தாலும் அது தமிழ்த் தேசிய அரசியல் நிலைப்பாட்டை விரோதிப்பதாக அமைந்து விடக் கூடாது என்பதில் கவனமெடுத்தல் முக்கியமானது. சிலவேளைகளில், தமிழ் மக்களிடமிருக்கின்ற தமிழ்த் தேசிய உணர்வினை மழுங்கடிப்பதற்காகவும் வீரியத்தினை தணிப்பதற்காகவும் கூட இருக்கலாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி ஆகிய கட்சிகள் இவ்வாறான நிலைப்பாட்டினை எடுப்பதற்குத் தயாராக இருந்தாலும், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினைத் தலைமையாகக் கொண்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைப் (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) பொறுத்தவரையில் அவர்கள் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் குறிப்பிடுகின்ற தமிழ் மக்களுடைய விருப்பமாக இருக்கின்ற அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கி அதனூடாக அமைச்சுப் பதவிகளைப் பெற்றுச் செயற்படுதல் என்பதனை முற்று முழுதாக எதிர்ப்பவர்களாக உள்ளனர். இந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரசினுடைய கொள்கைகள், தீவிரமான பேரினவாத எதிர்ப்பு நிலைப்பாட்டைக் கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் ஆதரித்து அந்த ஆதரவின் அடிப்படையிலேயே ஒரு ஆசனம் தெரிவாகவும் மற்றொரு ஆசனம் தேசியப் பட்டியலாகவும் கிடைத்திருந்தது. இந்த இரண்டு ஆசனங்களையும் வைத்துக்கொண்டு வடக்குக் கிழக்கில் தங்களுடைய தீவிரப் போக்குடைய அரசியலினைச் செய்திருந்தார்கள். இந்த அரசியல் மூலமாக அவர்களுடைய ஆதரவு மேலும் அதிகரித்திருக்கிறதா இல்லையா என்பது எதிர்வரும் தேர்தலில் வெளிப்படுத்தப்படும்.

> **தமிழ்த் தேசிய நலன் பேணல், உரிமையுடன் கூடிய அபிவிருத்தி, ஆட்சியிலுள்ள அரசாங்கத்தில் அதிகாரமிருத்தல் போன்றவை பயன்படும் ஆட்சி நாட்டில் நடைபெறுவதற்கான வழி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஏற்படுவதும் இதற்குள்ளான தேவைப்பாடாகும். இதற்குள் மக்கள் நடத்தும் அரசியல் வெற்றிபெறவேண்டும்**

இருந்தாலும், இந்த இரண்டு நிலைப்பாடுகளுக்கும் இடையிலுள்ள முரண் நிலை எவ்வாறு தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் தமிழர்களுடைய சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தினை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு செல்லும் என்பது ஆராயப்பட வேண்டியது. இருந்தாலும், எதிர்காலத்தில் எதிர்கொள்ளவேண்டிய சவால்களைக் கவனத்திலெடுப்பது முக்கியமாகும்.

ஒற்றையாட்சிக்குள் நாட்டை வழி நடத்துதல் ஒன்றே இலங்கையின் அரசியலமைப்பின் கட்டுப்பாடு. இந்தக் கட்டுப்பாட்டினை மீறும் அளவிற்கு இலங்கையில் ஆட்சிக்கு வரும் எந்தவொரு அரசாங்கமும் நகர்வுகளை முன்னெடுக்காது என்பது அனைவருக்கும் தெரிந்ததே. அதனை மீறும் தைரியம் எந்தவொரு சிங்கள அரசத் தலைவருக்கும் இல்லையென்பதும் நிச்சயமானது. அந்தவகையில் தமிழர்களின் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான நிலையெடுப்பு அரசியல்வாதிகளின் கருத்தையொட்டியிருக்குமா என்பது புரியாத புதிரே.

அதே நேரத்தில், ஆட்சியமைப்புக்கான பெரும்பான்மை மக்கள் விடுதலை முன்னணி தேசிய மக்கள் சக்திக்கு வாய்க்குமா அல்லது வேறு கட்சிகளுடன் இணைந்து ஆட்சியமைக்க வேண்டிய சூழல் உருவாகுமா என்பது சரியாகத் தெரியாவிட்டாலும் யார் இணைவார்கள். யார் இணைக்கப்படுவார்கள் அதற்கான உடன்பாடுகள் எவ்வாறு ஏற்படும் என்பதெல்லாம் நிச்சயமற்றவையே.

ஆனாலும், தமிழ் மக்களது நிலைப்பாட்டுக்கு நேரெதிராக முஸ்லிம் மக்களிடம் காணப்படுகின்ற ஆளும் கட்சியுடன் இணைவதான அரசியல் நிலைப்பாடானது இம்முறை சற்று வித்தியாசமாகவே இருக்கும். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சில மாவட்டங்களில் தனித்தும் பல மாவட்டங்களில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தும் போட்டியிடுகின்றது. அத்துடன், தேசிய மக்கள் சக்தியுடன் சில முஸ்லிம் கட்சிகள் இணைந்து போட்டியிடுகின்றன. அதே நேரத்தில், தனி நபர்களாகவும் முஸ்லிம்கள் போட்டியிடுகின்றனர். இதில் உள்ள அரசாங்கத்துடன் மக்கள் இணைந்திருத்தல் என்ற கொள்கை ஆதிக்கம் செலுத்துமானால் முஸ்லிம் கட்சிகளின் முன்னைய அரசியல்வாதிகள் பலர் தோல்வியைச் சந்திப்பார்கள். இது அவர்களுக்கு நலனுடனான ஆபத்தே.

பெரும்பான்மைச் சிங்கள மக்களது தீர்மானத்தில் அமையவிருக்கின்ற புதிய பாராளுமன்றத்தில் தமிழர் தரப்பு எவ்வாறு தமது ஆதிக்கத்தையும் அதிகாரத்தினையும் வைத்திருக்கப் போகிறது. முஸ்லிம்கள் அதற்குள் எவ்வாறு தம்மைத் தக்கவைத்துக் கொள்ளவுள்ளனர் என்பவை மிக முக்கியமும் சிக்கலுமானதே.

மக்கள் தமக்கான அரசியலைச் செய்ய முனைந்துகொண்டிருக்கையில் நகர்த்தப்படும் அனைத்துக்கும் அவர்களே தீர்ப்பாளர்கள் என்றாலும், நாட்டில் பலமான எதிர்க்கட்சியும் அவசியம் என்பதனையும் அவர்கள் புரிந்து கொள்வார்கள். அதுவே நாட்டிற்கும் மக்களுடைய எதிர்காலத்துக்கும் நல்லதும் சிறப்பானதுமாகும்.

தமிழ்த் தேசிய நலன் பேணல், உரிமையுடன் கூடிய அபிவிருத்தி, ஆட்சியிலுள்ள அரசாங்கத்தில் அதிகாரமிருத்தல் போன்றவை பயன்படும் ஆட்சி நாட்டில் நடைபெறுவதற்கான வழி தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் ஏற்படுவதும் இதற்குள்ளான தேவைப்பாடாகும். இதற்குள் மக்கள் நடத்தும் அரசியல் வெற்றிபெறவேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் மன வலிமையையும் அன்பின் ஆழத்தையும் அவரின் மன்னித்தல் பண்பின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். மன்னித்தல் ஒருவரின் வியாபகமான நெஞ்சத்தின் இயல்பைக் காட்டி நிற்கும். மக்கள் இவர்களோடு இணைவார்கள்.

நண்பர்கள் மத்தியில், சின்னத் தவறுகள் நேர்ந்தாலும் பிரிந்து விடும் சூழ்நிலைகள் வருவதுண்டு. இந்நிலையில், ஒருவர் செய்த துரோகத்தை, அவரால் பாதிக்கப்பட்டவர் மன்னிப்பது பெரிய விடயம்.

கோபம், குரோதம் போன்றவற்றை எவரும் நிலையாக மனதில் வைத்திருத்தலாகாது. தவறுகளை அடிக்கடி செய்பவர்கள், தாங்கொணா இம்சைகள் செய்பவர்கள் போன்றவர்களைக்கூட பெருந்தன்மையுடன் மன்னித்து விடும் நபர்கள், பயத்தால் அல்ல, தங்களின் பலத்தைக் காட்டாமல் மன்னிப்பது, அவர்களது சகிப்புத் தன்மையுடன் கூடிய மேலான பண்பாகும்.

இன்று மக்களிடையே குரோதம், வன்மம் எல்லாம் பொறாமையால் மேலெழுகின்றன. தங்களைவிட எவரும் உயர்நிலைக்கு வரக்கூடாது எனும் எண்ணத்துடன் இயங்குபவர்கள் ஏராளம்.

எளியவர்களை வதைத்தலாகாது. மேன்மையான உள்ளம் கொண்டவர்கள், யாவரையும் அரவணைப்பார்கள். இணைந்து வாழத் தெரியாதவர்கள் தனிமைப்படுவார்கள்.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

### நகரத்துக்குள் பேருந்துகள் வர வேண்டும்

முல்லைத்தீவு நகரத்திற்குள் பல பேருந்துகள் வருகை தருவதில்லை என பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன.

2010இன் பின்னர் புதிய பேருந்து நிலையம் மாவட்டச் செயலகத்திற்கு அருகில் அமைக்கப்பட்டது. ஐந்தாண்டுகளுக்கு முன்னர் முல்லைத்தீவு நகர அபிவிருத்திக் குழு மாவட்டச் செயலாளரைச் சந்தித்து, புதிய பேருந்து நிலையத்திலிருந்து பணியினை தொடங்குகின்ற அனைத்து பேருந்துகளும் முல்லைத்தீவு நகரத்துக்கு சென்று ஐந்து நிமிடங்கள் கழித்து தமது பணியினை தொடங்குமாறு கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதன்பேரில், ஒரு மாதம் அளவில் அனைத்து பேருந்துகளும் நகரத்துக்குள் சென்று திரும்பின. தற்போது கொக்குளாய் பயணிக்கும் பேருந்து மட்டுமே நகரத்திற்குள் சென்று திரும்புவதாகவும் ஏனைய பேருந்துகள் நகரத்திற்குள் செல்வதில்லை எனவும் பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், நகரத்தில் இருந்து 500 மீற்றருக்கு அதிகமான துரம் பயணிகள் நடந்து வந்தே புதிய பேருந்து நிலையத்தில் பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே இவ்விடயத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- நடராசா கிருஸ்ணகுமார்

# அநுர அரசாங்கம் உண்மையில் புதிதாக பணம் அச்சிடுகின்றதா?



ச.சேகர்

அண்மைய வாரங்களில் சமூக வலைத்தளங்களில் மட்டுமன்றி, பிரதான ஊடகங்களிலும் பெரிதும் பேசப்பட்ட விடயங்களில் பணம் அச்சிடப்படுவதைப் பற்றியதாகும். இதைப் பற்றி தமிழ்மிரர் வணிகம் பகுதியில் ஏற்கெனவே நாம் பத்தி ஒன்றை எழுதியிருந்த நிலையில், மேலும் ஆழமாக இந்த விடயத்தைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக்கொடுப்பது உகந்தது என கருதுகிறோம். புதிய அரசாங்கத்தை சவால்களுக்கு உட்படுத்தும் வகையில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்ட வண்ணமுள்ளன. அரசியல் ரீதியில் இந்த விடயத்தில் கவனம் செலுத்தாமல், பொருளாதார ரீதியில் கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாகும். கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டிலும் இந்த விடயம் பற்றிப் பேசப்பட்டிருந்தது. இந்த விடயத்துக்கு ஊடகத்துறை அமைச்சரும், அமைச்சரவை பேச்சாளருமான விஜித ஹேரத் மறுப்பு தெரிவித்திருந்ததுடன், மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்கவும் இந்த பணம் அச்சிடுவது பற்றிய குற்றச்சாட்டை மறுத்திருந்தார். உண்மையில் இந்த பணம் அச்சிடுவது என்பது பொருளாதார மற்றும் தொழினுட்பத்துடன் தொடர்புடைய விடயமாகும். இதனை சாதாரண பொது மக்களுக்குத் தெளிவாகும் வகையில் குறிப்பிட வேண்டியது முக்கியமானதாகும்.

சுமார் 100 பில்லியன் ரூபாய் பெறுமதியான பணம் மத்திய வங்கியினால் அச்சிடப்பட்டிருந்ததாக செய்தி வெளியாகியிருந்தது. இதனால் பணம் அச்சிடப்படுவது என்றால் என்ன என்பதை நாம் தெளிவுபடுத்திக் கொள்வது முக்கியமானதாகும். இலங்கை மத்திய வங்கியினால் புதிதாகக் கோரிக்கை விடுக்கப்பட்டு, நாணயத்தாள்களை அச்சிட்டுப் பெற்று அவற்றைப் புழக்கத்தில் விடுவது என்பதாக அது பொருள்படாது. உள்நாட்டுப் பொருளாதாரத்தில் புதிய நாணயப் பெறுமதியை அறிமுகம் செய்வது என்பதாக அதனைக் குறிப்பிட முடியும். ஏற்கெனவே அச்சிடப்பட்டு மத்திய வங்கியில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டிருக்கும் நாணயத் தாள்களைப் புதிதாக வெளியிடுவதாகக் கூட இருக்கலாம்.

**ஊடக அறிக்கை**

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் |
| திகதி | 2024.10.29 |

**இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மற்றும் நாணய அச்சிடல் பற்றிய விளக்கம்**

இலங்கை மத்திய வங்கி அதன் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக 2024 ஒத்தோபர் 25 அன்று ரூ.100 பில்லியன்களை "அச்சிட்டது" எனக் குறிப்பிட்டு அண்மையில் அறிக்கைகள் வெளிவந்தன. இவ்வறிக்கைகள் செம்மையற்றவை மற்றும் அடிப்படையற்றவை என்பதை தெளிவுபடுத்துவது முக்கியமானதாகும். திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக திரவத்தன்மையை (பணம்) உட்செலுத்துவது பொருளாதாரத்தில் குறுகிய கால வட்டி வீதங்களை நிலைநிறுத்தி விலை நிலையுறுதியை உறுதிசெய்யும் நோக்கத்திற்காக வங்கித்தொழில் முறைமையில் போதுமான திரவத்தன்மையை முகாமைசெய்வதை நோக்காகக்கொண்ட வழமையான மத்திய வங்கித் தொழிற்பாடொன்றாகும். ஆகையினால் அது "நாணயம் அச்சிடல்" என ஒட்டுமொத்தமாக தவறாகப் பொருள்கொள்ளப்பட முடியாது.

**நாணயம் அச்சிடல் என்றால் என்ன?**

நாணயம் அச்சிடல் என்பதன் பொதுவான அர்த்தம் பொருளாதாரத்திற்கு புதிய பணத்தை வழங்குவதாகும் என்பதுடன் பொருளியல் சொல்லாடலில் மத்திய வங்கியொன்றின் மூலம் வழங்கப்படுகின்ற புதிய பணம் 'ஒதுக்குப் பணம்' அல்லது 'தளப் பணம்' என அறியப்படுகின்றது. வர்த்தக வங்கிகள், மத்திய வங்கி மூலம் வெளியிடப்படும் பணத்தை அடிப்படையாகக் கொண்டு மேலும் பணத்தை உருவாக்க முடியும் என்பதனால் ஒதுக்குப் பணமானது நாட்டின் நாணயத் தளம் (அல்லது உயர் வலுப் பணம்) எனவும் அழைக்கப்படுகின்றது. ஒதுக்குப் பணமானது மத்திய வங்கியின் நாணயப் பொறுப்பாகவும் கொள்ளப்படுவதுடன் இது மத்திய வங்கியின்

அதனால், பணம் அச்சிடப்பட்டு அது மத்திய வங்கியின் பாதுகாப்பு பெட்டகத்தில் பேணப்படும் வரையில் அவை மக்கள் பாவனைக்காக சேர்க்கப்படமாட்டாது. அந்தப் பணத்தைப் பயன்படுத்தி டொலர் கொள்வனவு செய்யப்பட்டால், அச்சந்தர்ப்பத்தில் பொருளாதாரத்துக்கு புதிய நாணயத் தொகை சேர்க்கப்படும். வங்கிகளுக்கும் உத்தியோகப்பூர்வமாக நாணயத்தை வெளியிடும் அதிகாரத்தை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் மத்திய வங்கி என்ன தெரிவித்திருந்தது என பார்ப்போம்.

இலங்கை மத்திய வங்கியின் முக்கிய குறிக்கோளானது விலை நிலையுறுதியை எய்துவதும் பேணுவதுமாகும். இதன் அர்த்தம் பணவீக்கத்தைக் குறைவாகவும் நிலையாகவும் வைத்திருப்பதாகும். வட்டி வீதங்களையும் பண நிரம்பலையும் மத்திய வங்கியொன்று முகாமை செய்கின்ற உபாயமொன்றாக விளங்குகின்ற நாணயக் கொள்கையானது விலை நிலையுறுதியினைப் பேணுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மத்திய வங்கியொன்றின் நாணயக் கொள்கையின் முக்கிய சாதனமொன்றாகும். நடைமுறையில் மத்திய வங்கியானது நாணயக் கொள்கையினை செயல்திறன் வாய்ந்த வகையில் நடைமுறைப்படுத்துவதற்குச் சந்தை அடிப்படையில் அமைந்த கொள்கைச் சாதனங்கள் மீது தங்கியிருப்பதுடன், இதனால் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் இச்செயன்முறையில் பயன்படுத்தப்படும் முதன்மைக் கருவிகளில் ஒன்றாகக் காணப்படுகின்றன.

பொருளாதாரத்தை உறுதியிழக்கச் செய்யக்கூடிய வட்டி வீதங்களின் சடுதியான மாற்றங்களைத் தடுக்கும் நோக்கத்திற்காகத் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழ், மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்குத் திரவத் தன்மையை வழங்குகின்றன. ஆகையினால், குறுகியகால வட்டி வீதங்களில் விசேடமாக, வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பண வீதங்களில் நிலையுறுதியினைப் பேணுவதற்குத் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் மூலம் கருவியொன்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஓரிரவு வட்டி வீதங்களில் நிலையுறுதியினை உறுதி செய்வதற்காக திரவத் தன்மையினை முகாமை செய்வதற்கு இலங்கை மத்திய வங்கி சந்தைத் தொழிற்பாடுகளை நடத்துகின்றது.

திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் ஒன்றில் தற்காலிக அல்லது நிரந்தர அடிப்படையில் அரசாங்கப்பிணையங்களின் கொள்வனவை அல்லது விற்பனையை ஈடுபடுத்துகின்ற ஏலங்களூடாக மேற்கொள்ளப்படுகின்றன. ஆகையினால், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளானவை வங்கித் தொழில்முறைமையில் திரவத் தன்மை சமமின்மைகளை முகாமை செய்வதில் உதவுகின்ற பெரும்பாலும் குறுகிய காலத் தொழிற்பாடுகளாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 2024 காலப்பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் மூலமான திரவத் தன்மை உட்செலுத்தல்கள் அநேகமாக ஓரிரவு (1 நாள்) அல்லது 7 நாட்களுக்கானவையாகக் காணப்படுகின்றன. வட்டி வீதங்கள் மீது மேல் நோக்கிய அழுத்தத்தை முகாமை செய்வதன் மூலம் நிதியியல் முறைமையினை நிலைநிறுத்துவதை நோக்காகக்கொண்ட தற்காலிக திரவத் தன்மை வழிமுறைகளாக இத்தொழிற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதுடன், இதன்மூலம் பொருளாதாரத்தின் சீரான தொழிற்பாடு உறுதி செய்யப்பட்டது என்பதுடன், வெறுமனே பணம் அச்சிடல் ஆகப்பொருள் கொள்ளப்படமுடியாது.




மேலும், உலகம் முழுவதுமுள்ள மத்திய வங்கிகள் திரவத் தன்மை நிலைமைகளை முகாமை செய்வதற்கு இதனையொத்த தொழிற்பாடுகளை நடத்துகின்றன. நாணயக் கொள்கையை நடாத்துவதன் கீழ், திரவத் தன்மையை முகாமை செய்வதில் இவை மத்திய வங்கிகளால் மேற்கொள்ளப்படுகின்ற வழமையான மற்றும் நியமமான நடவடிக்கைகளாகும்.

பொருளாதார செயற்பாடுகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குப் போதியளவில் 2024 ஆம் ஆண்டில் இதுவரையில் இலங்கையின் கையிருப்பு பணத் தொகை 147 பில்லியனினால் மாத்திரம் அதிகரித்துள்ளது. இவ்வாண்டில் இந்தத் தொகை அதிகரிப்பில், பிரதானமாக மத்திய வங்கியினால் அந்நியச் செலாவணியைக் கொள்வனவு செய்வதினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், மத்திய வங்கியின் வசம் காணப்படும் அரச பிணைகள் அதிகரிப்பும் இக்காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இலங்கை மத்திய வங்கியினால், பொருளாதாரத்துக்குப் பணத்தை விநியோகிக்கும் செயற்பாடுகளில் பிரதானமாக, மத்திய வங்கியினால் அரச பிணை முறிகள் அடிப்படை சந்தையினூடாக கொள்வனவு செய்திருந்ததினூடாக, பொருளாதாரத்துக்குப் பணத்தை விநியோகிப்பது மேற்கொள்ளப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் செப்டெம்பர் மாதம் இல. 16 எனும் இலங்கை மத்திய வங்கியின் சட்டத்தின் பிரகாரம், அரசாங்கத்தின் வரவு செலவை ஈடு செய்வதற்காக அரச பிணை முறிகளைக் கொள்வனவு செய்வதினூடாக ஏற்படும் பணம் அச்சிடும் செயற்பாடு முழுமையாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது, அரசாங்கத்துக்குக் கடன் பெற்றுக்கொடுப்பதற்காக மத்திய வங்கியினால் பணம் அச்சிடுவது முற்றிலும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாகின்றது. இந்த 2023 இல. 16 இலங்கை மத்திய வங்கி சட்டத்தின் பிரகாரம், அவசர நிலைகளில், நிபந்தனைகளுக்கு உட்பட்டு, மத்திய வங்கிக்குப் புதிதாகப் பணம் வெளியிட்டு அரசாங்கத்துக்குக் கடனை பெற்றுக்கொடுப்பதற்குச் சாத்தியம் உள்ளது. ஆனாலும், அதற்காகப் பாராளுமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் திறந்த சந்தைச் செயற்பாடுகளுக்காகப் பணம் அச்சிடப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக வெளியிடப்பட்டுள்ளது. 100 பில்லியன் ரூபாய் அச்சிடப்பட்டு இவ்வாறு விநியோகிக்கப்பட்டுள்ளது என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது, இது முற்றிலும் அடிப்படையற்றது என இலங்கை மத்திய வங்கி மறுத்துள்ளது.

திறை சேரி உண்டியல்களை ஏலமிட்டு அரசாங்கத்தினால் பெருமளவு கடன் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனும் குற்றச்சாட்டுகளும் வெளியிடப்பட்டுள்ளன. இது வாராந்தம் வழமையாக நடைபெறும் செயற்பாடாகும். முன்னர் வெளியிடப்பட்ட திறை சேரி உண்டியல்கள் முதிர்வடைந்ததும், அவற்றை மீளச் செலுத்துவது மேற்கொள்ளப்படுகின்றது. இதனால், அரசாங்கத்தினால் இவை புதிதாகப் பெற்றுக்கொண்ட கடனாகக் குறிப்பிடப்பட முடியாது. அரசாங்கத்தினால் புதிதாகத் தேசிய கடன் எந்தளவு பெறப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்வதற்கு, தேசிய கடன் தொகையின் எந்தளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை ஆராய வேண்டும்.

# வாக்களிப்பு முக்கியம் வாய்ந்தது



மக்பூல் சஃப்வான்,
கூலங்குளம்,
சிலாவத்துறை,
மன்னார்.

தேர்தல் என்பது ஒரு மக்கள் பிரதிநிதி அல்லது ஒருவரின் அரசியல் கருத்துக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கான முறையாகும். மற்றும் ஒரு நாட்டில் தேர்தல் என்பது நாட்டினதும் நாட்டு மக்களினதும் எதிர்கால தொடர்ச்சியை முடிவு செய்கின்ற தீர்மானம் மிக்க ஒரு சாதனமாகும் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் அத்தகைய முக்கியம் வாய்ந்த தேர்தல்களை அதன் அடிப்படை பண்புகள் சீர்குலையா வண்ணம் ஜனநாயக அடிப்படையில் நடத்தி முடிப்பது என்பது அவசியமானதாகும்.

அது மட்டுமன்றி ஜனநாயக முறைக்குத் தேவையான முக்கியமான அடுத்த விடயமாக சர்வஜன வாக்குரிமையாக ஒரு நாட்டிற்குரிய தகமை பெற்ற சகல பிரஜைக்கும் இனம், மதம், மொழி, சாதி, குலம், கல்வி, சொத்துரிமை, பிறப்பு, பிறப்பிடம், ஆண், பெண் எவ்வித பேதங்களும் அற்ற வகையில் நாட்டின் அதிகார நிர்வாகத்தில் பங்கேற்கும் உரிமையும் அத்துடன், தங்களுக்கு என ஒரு பிரதிநிதி நியமிப்பதற்கான உரிமையும் கொண்டதாகவே சர்வ ஜன வாக்குரிமை காணப்படுகின்றது.
மற்றும் மக்கள் இறைமையைப் பாதுகாக்கப்படுவதற்கான அதிகாரம் மக்களுக்கு உரித்தாவதுடன் தனக்காகவும் நாட்டிற்காகவும் தீர்மானத்தை எடுக்கக்கூடிய முக்கிய பொறுப்பும் மக்கள் மயமாகிறது.

வாக்களிப்பு மற்றும் அதன் முக்கியமின்மையால் மறைமுகமாக உரிமை கருத்து இழப்புக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன இன்று வாக்கின் பெருமதி தெரியாத தன்மைகளினால் தெரிவுகளில் ஏற்படும் ஊழல் எதிர்காலத்தில் அரசியல் பிரதிநிதிகளிடம் தங்கு நிலைக்கு உள்ளாகின்ற சந்தர்ப்பங்கள் உருவாகிறது பிரஜைக்கு ஜனநாயக அறிவு இல்லாத பிரதி நிதிகளின் தெளிவானது நாட்டினுடைய முழு அடைவு இழப்பையும் ஏற்படுத்தி விடுகிறது.

சில சட்ட மாற்றம் மக்களைப் பாதிக்கும் சில சட்டங்களுக்கு அரசியல் பிரதிநிதிகள் மக்களின் முடிவு சார்ந்து நிற்காமல் சுய இலாப நோக்கோடு தத்தமது ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தில் மக்களுக்குக் கருத்துச் சுதந்திரம் இருந்தும் கேள்வி கேட்கும் சுதந்திரம் இருந்தும் கேள்வி கேட்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டனர் இதனை எடுத்து நோக்கு கையில் தாக்கம் செலுத்தும் காரணி ஆக சர்வஜன வாக்கின் பெறுமதி தெரியாமையினால் ஏற்படும் மறைமுக உரிமை கருத்து இழப்பாகக் குறிப்பிட முடியும்.





பெண்கள் அரசியல் ஈடுபாடுகளில் இல்லாமை அவர்களின் பிரதிநிதித்துவ இழப்பு ஏற்படுவதுடன் அவர்களின் தனித்துவ பிரச்சினைகளைச் சுகாதார, குடும்பப் பிரச்சினைகள் போன்றவற்றை அவர்களே வெளிக்கொண்டு வருவதற்கான சந்தர்ப்பங்கள் இழக்கப்படுவதன் ஊடாக மறைமுகமாக உரிமை மறுக்கப்படுகின்றதைக் குறிப்பிட முடியும்


அதுமட்டுமன்றி அங்கவீனர்களை மனிதாபிமானமாகப் பார்க்கக் கூடியவர்களினை தெரிவு செய்தலின் ஊடாக அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க முடியும்.

எனவே, இந்த மாதிரியான தெரிவுகளை மேற்கொள்ளும் போது மனிதாபிமானமற்ற செயற்பாடுகளை மேற்கொள்ளும் பிரதிநிதிகளின் தெரிவுகளைத் தவிர்த்து உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வகையிலும் சமூகத்திற்கு இடையில் இன, மத, சமூக , சீர்குலைவுகள் ஏற்படாத வண்ணம் கவனித்து பெறுமதியான வாக்களிப்பு முக்கியம் வாய்ந்தது என்பதுடன், இன்றைய காலகட்டத்தில் நாட்டின் தேவையாக அமைவதுடன் ஜனநாயக அவசியமாகக் காணப்படுகின்ற இதனைக் குறிப்பிட முடியும்.

"அரசியலை நாம் தவிர்ப்போமானால் நம்மால் தவிர்க்கப்பட வேண்டியவர்கள் நம்மை ஆள நேரிடும்"

-ப்ளாட்டோ






# மாணவர்களின் மனநல மேம்பாடு



பாத்திமா சபா,
மூன்றாம் வருடம்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்



அண்மைக் காலங்களில் நமது நாட்டில் இடம்பெறக்கூடிய சில சம்பவங்கள் அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தும் விதமாகவே உள்ளன. கடந்த தினங்களில் பரபரப்பாகப் பேசப்பட்ட ஒரு விடயம் என்னவென்றால், கொழும்பில் தாமரைக் கோபுரத்தின் 29ஆவது மாடியின் உயரத்திலிருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சர்வதேச பாடசாலை மாணவி பற்றிய விடயங்களாகும். குறித்த மாணவி தற்கொலை செய்துகொள்வதற்கு ஒரு சில மாதங்களுக்கு முன்னர் அந்த மாணவியின் இரு நண்பர்கள் இதேபோல உயரமான கட்டிடத்தின் மேல் இருந்து பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவமும் பதிவு செய்யப்பட்டது. அந்த தாக்கம் தான் இந்த மாணவியின் தற்கொலைக்குப் பிரதான காரணமாக இருக்கலாம் என்று குறித்த மாணவியின் தந்தை வாக்கு மூலம் வழங்கியுள்ளார். தனது நண்பர்களை இழந்த துயரத்தில் இருக்கும் மாணவி, அதனைத் தாங்க முடியாமல் தானும் தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றது.

இப்படியான விடயங்களை முன்னிறுத்தி ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஓர் உயரமான இடத்தை தெரிவு செய்து அதிலிருந்து தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு அவர்களுக்குத் துணிவும் மன தைரியமும் எங்கிருந்து வந்தது என்பதை ஆராய வேண்டிய தேவை இருக்கின்றது. பல ஊடகங்களில் இந்த செய்தியானது பரபரப்பாகப் பேசப்பட்டுக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில், படிக்கும் வயதிலேயே மாணவர்கள் இவ்வாறான தவறான முடிவுகளை எடுப்பதற்கு மிகப் பிரதான காரணமாக அவர்களின் உளநல நிலைமையில் ஏற்பட்டுள்ள மாற்றம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக ஊடகங்களுக்கு மனநல மருத்துவர் ரூமி ரூபன் தெரிவிக்கும் போது, "மாணவர்கள் மத்தியில் தற்காலங்களில் மன அழுத்தம் அதிகமாக ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகளவில் இருக்கின்றன. மாணவர்களுக்குக் கல்வி நிலையங்களில் இருக்கக்கூடிய சிக்கல்கள், அவர்களுக்கு மன அழுத்தத்தைத் தரும்.

அதே நேரத்தில், பிறரோடு தங்களை ஒப்பிட்டுப் பார்க்கும் மனநிலையும் மாணவர்களிடம் அதிகமாக இருக்கின்றது. அத்துடன், பெற்றோர்கள் கொடுக்கும் அழுத்தம் மாணவர்களின் மனநிலையில் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றது. அதிக இணையப் பாவனை, இணைய விளையாட்டுக்கள் என்பனவும் மாணவர்களின் அன்றாட நடத்தைகளில் தாக்கம் செலுத்துகின்றன. இப்படியான காரணங்கள் மாணவர்கள் மத்தியில் மன அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பெற்றோர்கள் மாணவர்களை முறையாக அணுக வேண்டும். அவர்களோடு தங்களுடைய நேரத்தைச் செலவழிக்க வேண்டும். அவர்களை அன்றாடம் கண்காணிக்க வேண்டும். பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் மாணவர்களை முறையாகக் கண்காணித்து அவர்களின் உள நிலையில், மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் போனால் மனநல வைத்தியர்களை அணுக வேண்டும்" என்ற ஒரு தெளிவான கருத்தினை முன் வைத்திருந்தார்.

அந்த வகையில், ஒரு பொதுவான கோணத்தில் மாணவர்களின் உள நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கான காரணங்கள் என்ன என்ற விடயத்தினை உளவள ஆலோசகர்கள் கூறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு மிகத் தெளிவாக நோக்குவோம். குறிப்பாகப் பாடசாலைகளில் நடத்தப்படும் பொதுத் பரீட்சைகள் மீது வழங்கப்படும் அதீத முக்கியத்துவம், மாணவர்களை அதிக அளவில் மன அழுத்தத்துக்கு இட்டுச் செல்கின்றது. மேலும், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் பிள்ளைகள் மற்றும் மாணவர்கள் மீது அதிக எதிர்பார்ப்புகளை வைப்பதால் மாணவர்கள் அதனை எண்ணிய நிலையில், மன அழுத்தத்திற்கு ஆளாகின்றனர். கூடவே அதிகரித்து வரும் பாடத்திட்டச் சுமை மற்றும் போட்டித்தன்மை மாணவர்களை மன அழுத்தத்திற்கு ஆளாக்குகின்றது. தற்காலத்தில் மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகப் பாவனை அதிகரித்து இருக்கின்ற நிலையில், சமூக ஊடகங்களில் மற்றவர்களின் வாழ்க்கையைப் பார்த்து தங்களை ஒப்பிட்டுக் கொள்வதால் மாணவர்கள் தாழ்வு மனப்பான்மை அடைகின்றனர். அவ்வாறே சில குடும்பங்களில் பெற்றோரின் பிரிவு, குடும்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவை மாணவர்களின் உளநலத்தை அதிகளவில் பாதிக்கின்றது. மேலும், பாடசாலைகளில் ஏற்படும் பகிடிவதை மற்றும் பாகுபாடு போன்றவை மாணவர்களின் மன ஆரோக்கியத்தைப் பாதிக்கின்றன. இதனால் மாணவர்கள் தாங்களாக தங்கள் முடிவுகளை எடுத்துக்கொள்கின்றனர். இது அவர்களைத் தவறான பாதையில் பயணிப்பதற்கு வழியமைத்துக் கொடுக்கின்றது. சிந்திக்காமல் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் அவர்கள் தற்கொலை முடிவு வரை எடுப்பதற்கும் காரணமாக அமைகின்றது.

ஒக்டோபர் பத்தாம் திகதி உலக மனநல தினத்தையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட வேண்டும். அவரது உரையில் மாணவர்கள் மத்தியில் காணப்படக்கூடிய உளநலப் பிரச்சினைகளை எவ்வாறான கண்ணோட்டத்தில் பார்க்க வேண்டும் என்பதை சுட்டிக்காட்டியிருந்தார்.

"தற்கொலை செய்து கொள்வது, தற்கொலை செய்து கொள்வதற்கு முயற்சிப்பது, தங்களுக்கு தாங்களே தீங்குகளைச் செய்து கொள்வது தற்பொழுது சமூகத்தில் அதிகமாக இடம்பெறுகின்றது. இப்படியான சந்தர்ப்பங்களில் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், பாடசாலைகளுக்கும் குற்றம் சாட்டுவது இலகுவாக இருக்கின்றது. அவர்களின் கவனயீனமே இப்படி நடக்கக் காரணம் என்றும் குற்றஞ்சாட்டப்படுகின்றது. ஆனால், இதைத் தாண்டி நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. அந்தப் பிள்ளைகளுக்கு மன அழுத்தத்தைத் தரக்கூடிய முக்கியமான காரணங்கள் என்ன என்பதில் நம் கரிசனை கொள்ள வேண்டும். மேலும், இளைஞர்களுக்கான விசேடத்துவமான மற்றும் இளைஞர் உணர்திறன் கொண்ட உள நல சுகாதார சேவையை விருத்தி செய்வது தொடர்பில் நாம் கட்டாயம் அவதானம் செலுத்த வேண்டும்" என்கின்ற விடயத்தினை குறிப்பிட்டிருந்தார்.

அந்த வகையில், பிள்ளை ஒன்று இந்த நாட்டில் பிறந்த பின்னர் அந்தப் பிள்ளை அரச பாடசாலையிலோ அல்லது சர்வதேச பாடசாலையிலோ, எந்தப் பாடசாலையில் கற்றாலும் அது நம் நாட்டின் பிரஜைகளே. எனவே, இந்த நாட்டில் இருக்கக் கூடிய எல்லா மாணவர்களுக்குமான உளநல ஆரோக்கியத்தை உருவாக்க வேண்டியது அரசாங்கத்தின் பணியாகும். சகலருக்குமான சமூகப் பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்துவது அரசங்கத்தின் பொறுப்பாகும். அந்த வகையில், அரசாங்கம் இவ்விடயம் தொடர்பாகக் கவனத்தில் எடுத்து அதற்குரிய கொள்கைகளை வகுக்க வேண்டும்.

அத்துடன், பெற்றோர்களும் தங்களின் பிள்ளைகளின் மனநலத்தில் அதிக கவனம் செலுத்துவது முக்கியமான விடயமாகும். தமது பிள்ளைகள் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினரிடம் இருந்து விலகிச் செல்வது, திடீரென மனநிலையில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் அவர்களின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களைப் பெற்றோர்கள் அறிந்துகொள்வது கட்டாயமாகும். மேலும் இரண்டு வாரங்களுக்கு மேல் நீடித்திருக்கும் சோகம் அல்லது எரிச்சலான மனப்பான்மை, பிறருடன் பழகுவதில் ஆர்வமின்மை, தூக்க முறைகளில் மாற்றம், பசியின்மை மற்றும் கல்வி செயல்திறன் ஆகியவற்றில் திடீர் மாற்றங்கள் குறித்தும் கவனம் செலுத்துதல் மிக முக்கியமாகும்.

தமது பிள்ளைகள் நம்பிக்கையற்ற உணர்வில் அல்லது வாழ்க்கையை வெறுத்துக் கதைப்பது அல்லது அவ்வாறான பேச்சுக்கள் தங்கள் பிள்ளைகளிடமிருந்து வெளிவரும் போது கட்டாயமாகப் பெற்றோர்கள் அதில் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகளுடன் திறந்த தொடர்பைப் பேணுவதும் இன்றியமையாததாகும். பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் அவர்களின் உணர்ச்சிகளைப் பற்றிப் பேசுவதற்குப் பாதுகாப்பாக உணரும் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும். குறிப்பாகக் கட்டிளமைப் பருவ வயது என்பது மிகவும் சவால் மிக்கது. அதிகமாகக் கட்டிளமை பருவத்தினரே
அதிக மன உளைச்சலுக்கு ஆளாகிறார்கள், பெற்றோர்கள் இது தொடர்பில் சிந்தித்துச் செயற்படுவதன் மூலம் பிள்ளைகளைச் சரியான முறையில் வழிநடத்தி வாழ்க்கையில் சிறந்த அடைவுகளை அடையச் செய்யலாம்.

மாணவர்களின் மன உளைச்சலைத் தடுப்பது என்பது ஒரு கூட்டு முயற்சியாகும். கல்வி நிறுவனங்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் சமூகங்கள் இணைந்து செயல்படுவதன் மூலமே, மாணவர்களின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தி, அவர்களுக்கு ஒரு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க உதவ முடியும். அந்த வகையில், இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண, பல தரப்பிலும் இருந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் மன உளைச்சலைத் தடுப்பதற்கான சில முக்கிய நடவடிக்கைகளை ஆராயும் போது, பாடசாலைகளில் அதிகப்படியான பாடச்சுமை மாணவர்களுக்கு மன அழுத்தத்தை ஏற்படுத்தும். எனவே, பாடத்திட்டத்தை மறுபரிசீலனை செய்து, மாணவர்களின் திறனுக்கு ஏற்றவாறு பாடங்களை வடிவமைக்க வேண்டும். அவ்வாறே மதிப்பீட்டு முறைகளை மாற்றி, மாணவர்களின் அறிவு மற்றும் திறன்களை மட்டுமல்லாமல், அவர்களின் முயற்சி மற்றும் படைப்பாற்றலையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன், பாடசாலைகளில் மனநல ஆலோசகர்களை நியமித்து, மாணவர்களின் மன ஆரோக்கியம் தொடர்பில் சிறப்புக் கவனம் செலுத்துவது பற்றி பாடசாலை நிர்வாகங்கள் சிந்திக்க வேண்டும். எப்போதும் ஆசிரியர்கள் மாணவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, அவர்களின் பிரச்சினைகளைக் கேட்டு, தீர்வு காண உதவ வேண்டும். பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிட்டு, அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ள வேண்டும். மேலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளிடம் அதிகப்படியான எதிர்பார்ப்புகளை வைக்காமல், அவர்களின் திறன்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மாணவர்களுக்கு மன ஆலோசனை மற்றும் ஆதரவு வழங்கும் விதமான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சமூகத்தில் ஏற்பாடு செய்து நடத்துவது மாணவர்களின் உள ஆரோக்கியத்தைப் பேண உதவும்.

பெற்றோர்களும் ஆசிரியர்களும் தங்களுக்கு இயலாத கட்டத்தில் தங்கள் பிள்ளைகளை அழைத்துச் சென்று உளவள ஆலோசகர்களை நாடுவது சிறந்தது. இலங்கையில் இலவசமான முறையில் மனநல ஆலோசனை வழங்கும் ஏராளமான இடங்கள் காணப்படுகின்றன. இப்படியான இடங்களை நாடி தகுந்த மருத்துவ வழிகாட்டல்களைப் பெறுவது முக்கியமானது. இதன் மூலம் எதிர்பாராமல் வரும் விபரீதங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.





# கொக்கட்டிச்சோலையில்

கனகராசா சரவணன்

கொக்கட்டிச்சோலை மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லம் துப்புரவு செய்யும் நடவடிக்கையினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் ஆதரவாளர்கள் வெள்ளிக்கிழமை (01) ஆரம்பித்தனர்.

எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாளையிட்டு மட்டக்களப்பிலுள்ள மாவீரர் துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்யும் நடவடிக்கையின் ஓர் அங்கமாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் ஒன்றிணைந்து மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தினை துப்ரபுவு செய்யும் பணியை ஆரம்பித்தனர். இதேவேளை, மாவட்டத்தில் வாகரைகண்டலடி, தரவை, தாண்டியடி, மாவடி முன்மாரி ஆகிய நான்கு மாவீரர் துயிலும் இலங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.













# சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில்

நவம்பர் மாதம் 27ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் இடம்பெறவுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் மாவீரர் நாளுக்கான தயார்ப்படுத்தல்கள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த நிலையில், தீவக நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினால் சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் துப்புரவுப் பணிகள், சனிக்கிழமை (02) காலை ஆரம்பிக்கப்பட்டன. பொது சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டு நினைவேந்தல் ஆரம்பிக்கப்பட்டது.

சிரமதானப் பணிகளில் மாவீரர்களின் பெற்றோர்கள், உறவினர்கள், முன்னாள் போராளிகள் சமூக செயற்பாட்டாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

– நிதர்சன் வினோத்








# கௌரி விரத காப்புக் கட்டுதல்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயத்தில் பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக்குருக்கள் தலைமையில், சனிக்கிழமை (02) இடம்பெற்ற கேதார கௌரி விரதக் காப்புக் கட்டுதலின் போது...

வி.ரி. சகாதேவராஜா

அமெரிக்கா

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்:

# ஹாரிஸ் முன்னிலை?

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் 2 நாட்களே உள்ள நிலையில் எடுக்கப்பட்ட கருத்து கணிப்பில், ஜனநாயக கட்சி சார்பில் தற்போதைய துணை ஜனாதிபதியும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான கமலா ஹாரிஸ் முன்னிலையில் உள்ளார்.



பிரதான வேட்பாளர்களான கமலா ஹாரிஸ், டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் இறுதிக்கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார்கள். கமலா ஹாரிஸ், ஜோர்ஜியாவில் பிரசாரத்தில் ஈடுபட்டார். வடக்கு கரோலினாவில் ட்ரம்ப் ஆதரவு திரட்டினார்.

இந்த நிலையில், ஜனாதிபதித் தேர்தலில் இறுதிக்கட்ட கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. அயோவா மாகாணத்தில் நடந்த இந்த கருத்துக் கணிப்பில், கமலா ஹாரிஸ் முன்னிலையில் உள்ளார்.

அவருக்கு 47 சதவீத ஆதரவு கிடைத்தது. ட்ரம்புக்கு 44 சதவீத ஆதரவு கிடைத்தது. ட்ரம்பை விட கமலா ஹாரிஸ் 3 சதவீதம் அதிகம் பெற்றுள்ளார்.

2016 மற்றும் 2020ஆம் ஆண்டுகளில் நடந்த தேர்தலில் அயோவா மாகாணத்தில், ட்ரம்ப் எளிதில் வெற்றி பெற்றிருந்தார். தற்போது அங்கு அவர் பின்தங்கி இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மற்றொரு நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் டிரம்ப் முன்னிலையில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் இரு வேட்பாளர்கள் இடையே கடும் போட்டி நிலவும் என்று அந்நாட்டு அரசியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

ஜப்பான்

தொலைபேசியுடன்

## சைக்கிள் ஓட்டினால் சிறை



சைக்கிள் ஓட்டும்போது தொலைபேசியில் பேசவோ, இணையத்தை பயன்படுத்தவோ கூடாது. இதனை மீறுபவர்களுக்கு 6 மாதம் சிறைத் தண்டனை அல்லது சுமார் 50 ஆயிரம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும் என ஜப்பான் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கொரோனா தொற்று காலத்தில் பின்னர், ஜப்பானில் சைக்கிள் ஓட்டுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்தது. அதேசமயம், சைக்கிள் ஓட்டும்போது கவனக்குறைவால் ஏற்படும் விபத்துகளின் எண்ணிக்கையும் பல மடங்கு உயர்ந்தது.

இதனால் சைக்கிள் விபத்துகளை கட்டுப்படுத்தும் விதமாக, அந்நாட்டு அரசாங்கம் மேற்கண்ட முடிவை எடுத்துள்ளது. இதுதவிர, மதுபோதையில் சைக்கிள் ஓட்டினாலும் 3 ஆண்டுகள் சிறை தண்டனை அல்லது சுமார் 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கும் வகையில் போக்குவரத்து விதிமுறைகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது.

பாகிஸ்தான்

பஸ் விபத்தில்

## ஐவர் பலி; 15 பேர் காயம்

பாகிஸ்தான் - ஜகோபாபாத் பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில், 5 பேர் உயிரிழந்ததுடன், 15 பேர் காயமடைந்துள்ளனர்.

சனிக்கிழமை (2), பலூசிஸ்தான் மாகாணத்தில் இருந்து பஞ்சாப் மாகாணம் நோக்கி பயணித்த குறித்த பஸ், திடீரென வேக கட்டுப்பாட்டை இழந்து, பள்ளத்திற்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

கடந்த மே மாதம், ஜகோபாபாத் பகுதியில், திருமண நிகழ்ச்சிக்காக வந்திருந்த விருந்தினர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று, விபத்துக்குள்ளானது. இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், 30 பேர் காயமடைந்தனர். அந்த பஸ்சின் டயர் வெடித்ததில் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து பஸ் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.



உத்தரப் பிரதேசம்

## முதல்வருக்கு கொலை மிரட்டல் விடுத்த பெண் கைது

“உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் இன்னும் 10 நாட்களுக்குள் இராஜினாமா செய்ய வேண்டும். இல்லையென்றால் மகாராஷ்டிராவின் முன்னாள் அமைச்சர் பாபா சித்திக் போல அவரும் கொல்லப்படுவார்” என்று மும்பை பொலிஸாருக்கு சனிக்கிழமை (02) மிரட்டல் செய்தி விடுக்கப்பட்டுள்ளது.

மும்பை பொலிஸ் போக்குவரத்து பிரிவின் வாட்ஸ்அப் எண்ணுக்கு தெரியாத எண்ணில் இருந்து அழைப்பு வந்துள்ளது. இதனையடுத்து, முதல்வர் யோகி ஆதித்யநாத்துக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக 24 வயது பெண் ஒருவர் ஞாயிற்றுக்கிழமை (03) கைது செய்யப்பட்டுள்ளதாக மும்பை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



கைது செய்யப்பட்ட பெண். பி.எஸ்சி. தகவல் தொழில்நுட்பம் படித்துள்ள அப்பெண் தனது குடும்பத்தினருடன் மகாராஷ்டிரா மாநிலம் தானே மாவட்டத்துக்கு அருகே உள்ள உல்காஸ்நகர் பகுதியில் வசித்து வருகிறார். அப்பெண் சிறிது மனநிலை பாதிக்கப்பட்டவர். அப்பெண்ணைக் கைது செய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆந்திரா

முதலமைச்சருக்கு

## முத்தம் கொடுக்க முயன்ற பெண்ணால் பரபரப்பு

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடுவுக்கு முத்தம் கொடுக்க முயன்ற பெண் ஒருவரின் வீடியோ சமூக வலைத்தளங்களை தற்போது பரவி பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது.

ஆந்திர முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு அனக்கா பள்ளி மாவட்டத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில், சனிக்கிழமை (2), அனக்காபள்ளி மாவட்டத்தில் உள்ள பரவாடா என்ற இடத்தில் பொதுமக்களை சந்தித்தார். பின்னர் தனது சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு தனது வாகனத்தில் ஏறுவதற்காக சென்றபோது, பரவாடாவை சேர்ந்த பெண் ஒருவர் பூங்குத்துடன் வந்து திடீரென சந்திரபாபு நாயுடுவுக்கு முத்தம் கொடுக்க பலமுறை முயன்றுள்ளார்.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு பணிவுடன் மறுப்பு தெரிவித்தார். மாறாக, பெண்ணை தன்னுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கியுள்ளார்.



தமிழகம்

கட்சி நிர்வாகிகளுக்கு

## வாய்ப்பூட்டு போட்டார் எடப்பாடி

பா.ஜ.க. விடுதலை சிறுத்தைகள் கட்சி, நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி ஆகிய 4 கட்சிகளை விமர்சித்து கருத்து தெரிவிக்க கூடாது என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

தமிழக வெற்றிக் கழக மாநாட்டில் பேசிய விஜய், “2026ஆம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தமிழக வெற்றிக் கழகம் வெற்றி பெறுவது உறுதி. என்றாலும், கூட்டணிக்கு வரும் கட்சிகளுக்கு ஆட்சி, அதிகாரத்தில் பங்களிப்பு வழங்கப்படும்” என்று வெளிப்படையாக அறிவித்தார். இது, தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணியில் உள்ள கட்சிகளை திரும்பி பார்க்க வைத்துள்ளது.

அதேநேரத்தில், பிரதான எதிர்க்கட்சியான அ.தி.மு.கவே விஜய் கட்சியுடன் கூட்டணி அமைத்தால் என்ன என்று யோசித்து வருகிறது. வலுவான கூட்டணியுடன் களம் இறங்கும் தி.மு.கவை வீழ்த்த இதுபோன்ற கட்சியுடன் கூட்டணி அமைப்பது அவசியம் என்று அ.தி.மு.க. கருதுகிறது.

இந்த நிலையில், புதன்கிழமை (6), சென்னையில் அ.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டம், கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போது, பா.ஜ.க. விடுதலை சிறுத்தைகள் கட்சி, தமிழக வெற்றிக் கழகம், நாம் தமிழர் கட்சி ஆகிய 4 கட்சிகளை விமர்சித்து கருத்து தெரிவிக்க கூடாது என்றார்.

# இந்தியாவை வெள்ளையடித்த நியூசிலாந்து

டெஸ்ட் தொடரில் இந்தியாவை நியூசிலாந்து வெள்ளையடித்துள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் வென்று ஏற்கெனவே தொடரைக் கைப்பற்றிய நியூசிலாந்து, மும்பையில் வெள்ளிக்கிழமை (01) ஆரம்பித்து ஞாயிற்றுக்கிழமை(03) முடிவுக்கு வந்த மூன்றாவது போட்டியையும் வென்றமையையடுத்து இந்தியாவில் அவ்வணிக்கு முதற்தடையாக 3-0 என்ற வெள்ளையடிப்பை வழங்கியுள்ளது.



ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: நியூசிலாந்து

நியூசிலாந்து: 235/10

(துடுப்பாட்டம்: டரைல் மிற்செல் 82, வில் யங்க் 71, டொம் லேதம் 28, கிளென் பிலிப்ஸ் 17 ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 5/65, வொஷிங்டன் சுந்தர் 4/81, ஆகாஷ் டீப் 1/22)

இந்தியா: 263/10

(துடுப்பாட்டம்: ஷுப்மன் கில் 90, றிஷப் பண்ட் 60, வொஷிங்டன் சுந்தர் ஆ.இ 38, யஷஸ்வி ஜைஸ்வால் 30 ஓட்டங்கள். பந்துவீச்சு: அஜாஸ் பட்டேல் 5/103, மற் ஹென்றி 1/26, இஷ் சோதி 1/36, கிளென் பிலிப்ஸ் 1/84)

நியூசிலாந்து: 174/10

(துடுப்பாட்டம்: வில் யங்க் 51, கிளென் பிலிப்ஸ் 26, டெவோன் கொன்வே 22, டரைல் மிற்செல் 21 ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவீந்திர ஜடேஜா 5/55, இரவிச்சந்திரன் அஷ்வின் 3/63, ஆகாஷ் டீப் 1/10, வொஷிங்டன் சுந்தர் 1/30)

இந்தியா: 121/10

(வெ.இ: 147 ஓட்டங்கள்)

(துடுப்பாட்டம்: றிஷப் பண்ட் 64 ஓட்டங்கள். பந்துவீச்சு: அஜாஸ் பட்டேல் 6/57, கிளென் பிலிப்ஸ் 3/42, மற் ஹென்றி 1/10)

போட்டியின் நாயகன்: அஜாஸ் பட்டேல்

தொடரின் நாயகன்: வில் யங்க்

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## போர்ண்மெத்திடம் தோற்ற சிற்றி

### ஆர்சனலை வென்ற நியூகாசில்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், போர்ண்மெத்தின் மைதானத்தில் சனிக்கிழமை (02) நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் நடப்பு சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி தோற்றது.



சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொஸ்கோ கவிரோல் பெற்றதுடன், போர்ண்மெத் சார்பாக அந்தோனி செமென்யோ, இவான்சிலின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இந்நிலையில் தமது மைதானத்தில் நடைபெற்ற ஆர்சனலுடனான போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் நியூகாசில் யுனைட்டெட் வென்றது. நியூகாசில் சார்பாகப் பெறப்பட்ட கோலை அலெக்ஸான்டர் இஸாக் பெற்றிருந்தார்.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற எவெர்ற்றனுடனான போட்டியில் அடம் ஆர்ம்ஸ்ரோங்க் பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் செளதாம்டன் வென்றது.

ஹட்டன் வலயத்தில்

## பாடசாலை வீரர்களுக்கு வாய்ப்பு

இலங்கை கிரிக்கெட் சபையின் சிறப்பு செயற்திட்டத்தின் அமைவாக நுவரெலியா மாவட்ட கிரிக்கட் சங்கத்தின் ஏற்பாட்டில் ஹட்டன் கல்வி வலய பாடசாலைக்கான திறமை தேடலானது நோர்வூட் தொண்டமான் விளையாட்டு மைதானத்தில் செவ்வாய்க்கிழமை (05) காலை 9 மணி முதல் இடம்பெற இருக்கின்றது.

இந்த திறமை தேடல் ஹட்டன் வலய கடின பந்து விளையாடாத பாடசாலை மாத்திரம் பங்குப்பற்ற முடியும். 2012.09.01 பிறகு பிறந்த வீரர்கள் மாத்திரம் பங்குகொள்ள வேண்டும். ஹட்டன் வலய கல்வி காரியாலய அனுமதியோடு இத்திறமை தேடல் இடம்பெறுவதால் வீரர்களோடு பொறுப்பாசிரியர் கட்டாயம் வருகை தரவேண்டும்.

மென்பந்தின் ஊடாகவே திறமைக்கான தேடல் இடம்பெறும் என்பதுடன் தெரிவு செய்யும் வீரர்களுக்கு கடின பந்து சிறப்பு பயிற்சிகள் எதிர்காலத்தில் வழங்கப்படும் என்பது சிறப்பம்சமாகும்.

நுவரெலியா மாவட்டம் முழுவதுமாக இடம்பெறும் இத்திறமை தேடல் ஏனைய வலய கல்வி பாடசாலைகளுக்கு எதிர்காலத்தில் இடம்பெறும்.

இரண்டாவது போட்டியில்

## மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்திய இங்கிலாந்து

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான 2ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இங்கிலாந்து வென்றது.



மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்து வென்றிருந்த நிலையில், அன்டிகுவாவில் சனிக்கிழமை (02) நடைபெற்ற 2ஆவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்தின் அணித்தலைவர் லியம் லிவிங்ஸ்டோன் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள், அணித்தலைவர் ஷே ஹோப்பின் 117 (127), கேசி காட்டியின் 71 (77), ஷெர்ஃபேன் ருதஃபோர்ட்டின் 54 (36), ஷிம்ரோன் ஹெட்மயரின் 24 (11), மத்தியூ போர்டேயின் ஆட்டமிழக்காத 23 (11), றொஸ்டன் சேஸின் ஆட்டமிழக்காத 20 (22) ஓட்டங்களோடு 6 விக்கெட்டுகளை இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அடில் ரஷீட், ஜோன் டேர்னர் ஆகியோர் தலா 2, ஜொஃப்ரா ஆர்ச்சர் மற்றும் லிவிங்ஸ்டோன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 329 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, லிவிங்ஸ்டோனின் ஆட்டமிழக்காத 124 (85), பில் ஸோல்டின் 59 (59), ஜேக்கப் பெதெல்லின் 55 (57), சாம் கர்ரனின் 52 (52) ஓட்டங்களோடு 47.3 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்த நிலையில், வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் போர்டே 3, சேஸ் மற்றும் ஷாமர் ஜோசப் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக லிவிங்ஸ்டோன் தெரிவானார்.

இன்று ஆரம்பிக்கிறது தொடர்:

## அவுஸ்திரேலியாவை வீழ்த்துமா பாகிஸ்தான்?

அவுஸ்திரேலியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது மெல்பேணில் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.



பாகிஸ்தானானது அவுஸ்திரேலியாவுக்கு சவாலை வழங்க வேண்டுமென்றால் அணித்தலைவர் மொஹமட் றிஸ்வான், சிரேஷ்ட வீரர் பாபர் அஸாமிடமிருந்து வேகமான பெரிய இனிங்ஸ்கள் தேவையாக உள்ளது.

மற்றையது அவுஸ்திரேலியாவின் மற் ஷோர்ட், ஜேக் பிறேஸர்-மக்குர்க் ஆகியோரை நசீம் ஷா, ஹரிஸ் றாஃப், மொஹமட் ஹஸ்னைன், ஷகீன் ஷா அஃப்ரிடி கூட்டணி எவ்வாறு கட்டுப்படுத்துகின்றது என்பதிலும் இத்தொடரின் முடிவு தங்கியுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 04, நவம்பர் 2024, இல. 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.